1972 மார்ச் 24]

பணிப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதியம்

***673—வினா: திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் ஆரம்பப் பள்ளிகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பணிப்பயிற்சி ஆசிரியர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அண்டு (இ) தொழில் பழகு ஆசிரியரைப் பள்ளிக்கு நியமனம் செய்யும் அதிகாரம் யாரிடம் உள்ளதோ, அந்த நபர் அல்லது அமைப்பின் கீழ் உள்ள எந்தப்பள்ளியிலாவது அத்தொழில் பழகு ஆசிரியர் கிரேடைச் சார்ந்த சாதாரண ஆசிரியர் பதவி ஏதாவது காலி விழுமாயின் அல்லது புதிதாக ஏற்படுத்தப்படுமாயின் அப்பதவிக்கு அத்தொழில் பழகு ஆசிரியரைத்தான் நியமிக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே எல்லா தொழில் பழகு ஆசிரியர்களும் கூடிய விரைவில் சாதாரண ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டு நிரந்தர ஊதியம் பெறுவர் என்பது தெளிவாகும்.

திரு எம். முத்தையா : தலைவர் அவர்களே, தற்பொழுது அப்ரண்டிஸ் ஆசிரியர்கள் எடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அந்த ஆசிரியர்களின் நன்மையைக் கருதியாவது இந்த ஆண்டிலிருந்து அப்ரண்டிஸ் ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது வரையில் 6,500 இடங்கள் ஒதுக்கப்பட்டன. 3,703 ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். 2,797 பதவிகளுக்கு 1971-72 அம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு எவ்வளவு இடங்கள் காலி ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு அவர்கள் நிரப்பப்படுகிறார்கள். புதிய பதவிகள், அல்லது இடம் காலியாக ஏற்படுமானால் அந்த அந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களையே நிரப்புகிற முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு கோ. இளங்கோவன் : தொழில் பழகு ஆசிரியர்கள் சாதாரணப் பட்டதாரி ஆசிரியர்களைவிட குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள். எனவே அதை உத்தேசித்தாவது அவர்களை நிரந்தரமாக நியமிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு ஏதேனும் வேலை கிடைக்க வேண்டிய வகையிலேதான இது வகுக்கப்பட்டது. எந்தவிதமான ஊதியமும் இல்லாமல் இருக்கின்ற நிலையிலே முழு வேலை கிடைக்கக்கூடிய நிலை வரையில் இடைக்காலத்திலே அவர்களுக்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முழுமையான சம்பளமும் கொடுக்க வேண்டுமென்றால் நிதி வசதி பெருகினால்தான் செய்ய முடியும். பல ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியிலே படித்துவிட்டு இடையிலே வேலையில்லாமல் இருக்கிற குறையைப் போக்குவதற்குத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[1972 மார்ச் 24

திரு ஜே. ஜேம்ஸ் : அப்ரன்டிஸ் ஆசிரியர்கள் அப்ரன்டீஸாக இருக்கும் பொழுது ஓவர் ஏஜ் ஆகிவிடுகிறது. அந்தக் காரணத்தினால அவர்கள் நிரந்தரமாக வேலை பார்க்க வசதியில்லை. எனவே ஓவர் ஏஜ் ஆனால் அதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப் பிரச்சினையில்லை. அந்தப் பிரச்னை இருக்குமானால் தனியாக ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : வேலையில்லாத ஆசிரியர்களுக்கு இடைக்காலத்தில் அப்ரன்டிஸ்ஷிப் கொடுக்கப்பட்டாலும், வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கு அன் எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் அல்லது சப்ஸிடி ஏதாவது கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முழு வேலை கிடைக்கிற வரையில் தொழில் பழகு ஆசிரியர்களாக இடைக்காலத்திலே நியமிக்கப்படுகின்ற வகையிலேதான் 6,500 இடங்கள் உண்டாக்கப்பட்டன. அந்த வகையிலேதான் இப்பொழுது வேலைவாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள்.

***674. வினா:—திரு எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாடு முழுவதும் பணிபுரியும் பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள் தாங்கள் பெறும் நாள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமெனக் கோரி தமிழ் நாடு அரசு தலைமைச் செயலகம் முன்னால் 7–7–71 முதல் 11–7–71 வரை அடையாள உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருந்தார்களா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(The hon. Member Thiru M. Muthiah rose.)

MR. SPEAKER : It is a most out-dated question.

***675. வினா:—திரு இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதிநேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

(இ) அவர்களை முழு நேர வேலையில் அமர்த்தி முழுச் சம்பளம் அளிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) செங்கை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.